முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 08.12.2021 அ.வ.எண்.48/2012 வா.சா.1 மயில்சாமிதேவர்

3, 5 மற்றும் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் பொள்ளாச்சி வட்டம், எம்மேகவுண்டன்பாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனக்கு 2002ம் வருடத்திய பாகப்பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது. தாவா சொத்துக்கள் ஆதியில் குப்பையதேவர் மகன் சுப்பையதேவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. மேற்படி சுப்பைய தேவருக்கு எந்த வருடத்திய பத்திரப்படி தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் எனது சொந்தக்காரர்கள்தான். 1ம் பிரதிவாதி கருப்ப தேவர் எனது பங்காளியாவார் அண்ணன் உறவுமுறையாவார். 2ம் பிரதிவாதி கோபால்தேவர் மச்சினன் உறவு முறை. 3ம் பிரதிவாதி பேச்சியம்மாள் அண்ணி உறவுமுறை. 4ம் பிரதிவாதி வெள்ளிங்கிரி மற்றும் 5ம் பிரதிவாதி ராஜு ஆகியோர் மச்சினன் உறவுமுறை. 6ம் பிரதிவாதி தெய்வானை எனக்கு அண்ணி உறவுமுறை. 7 முதல் 10 பிரதிவாதிகள் எனக்கு மச்சினன் உறவுமுறை.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/- (மயில்சாமிதேவர்)